புதுச்சேரி அரசு

கலை, பண்பாட்டுத்துறை

***

தேதி: 22.01.2025

## பத்திரிகைச் செய்தி குறிப்பு

புதுச்சேரி அரசு கலை, பண்பாட்டுதுறை சார்பில் புதுச்சேரி மாநில கலைஞர்களைக் கொண்டு வருகின்ற குடியரசு தினத்தன்று (26.01.2025) மாலை நான்கு மணி அளவில் புதுச்சேரியின் முக்கியமான வீதிகளின் வழியே கலாச்சார ஊர்வலம் நடைபெற உள்ளது. இந்த ஊர்வலத்தில் கலந்து கொள்ள கலாச்சார குழுக்களிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. கலாச்சாரக் குழுக்கள் தங்களுக்குச் சொந்தமான இசைக்கருவிகளுடன் அதற்குண்டான ஒப்பனையுடன் வரவேண்டும். இதற்கான விண்ணப்பங்கள் 23/01/2025 கலை பண்பாட்டு துறை அலுவலகத்தில் கிடைக்கும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 25/01/2025. கலாச்சார ஊர்வலத்தில் கலந்து கொள்ள விரும்பும் கலைக்குழுக்கள் அதற்குரிய விண்ணப்பப் படிவங்கள் மற்றும் விதிமுறைகளைக் கலை, பண்பாட்டுத்துறை அலுவலகத்தில் நேரிடையாகவோ அல்லது https://art.py.gov.in என்ற இணையதளத்தின் வழியாகவோ பதிவிறக்கம் செய்து தகுந்த சான்றாவணங்களுடன் இத்துறைக்குச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இவண்

இயக்குநர்,<br>
கலை பண்பாட்டுத்துறை<br>
புதுச்சேரி